கொடுத்து வாங்கிச் சென்றதினால்தான் தமிழ்நாட்டிலுள்ள வியாபாரிகள் அதிக விலைக்கு அல்லது அதே விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று சொல்லுகிறார்கள். இது உண்மையா ? அப்படியானால் ஆந்திராவுக்கு ஏற்றுமதியாவதைத் தடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில வியாபாரிகள் தெரிவித்த கவலைகளை மட்டும் கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதோடு புளி நியாயமான விலைக்கு கிடைக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் முக்கியமான நோக்கம். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற விவரம் என்னிடமில்லை.

SRI S. NAGARAJA MONIGER : மக்களின் அன்றாட தேவைக்கு வேண்டியிருக்கிற புளியின் விலையானது ஒன்றுக்கு நான்கு மடங்கு—ஒரு வண்டி 200 ரூபாய் என்று இருந்தது 800 ரூபாய் வரை விலை உயர்ந்திருக்கிறது—இவ்விதம் விலையுயர்ந்ததற்கு காரணம் வியாபாரிகளுடைய ஸ்பெகுலேஷன்தான் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே இதைத் தடுப்பதற்கு சட்டத்தின் மூலம் ஏதாவது வழி இருக்கிறதா ? அப்படியானால் யாராவது இதன் மூலம் தண்டிக்கப் பட்டார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சொன்னேன், நம்முடைய தேவையில் பாதியைத்தான் நாம் உற்பத்தி செய்கிறோம். மற்ற ராஜ்யங்களுக்கு அனுப்பப்படுகிற விஷயத்தில் நாம் அகில இந்திய ரீதியில் கவனிக்க வேண்டும். இதைப்பற்றி மத்திய அரசாங்கத்தோடு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : தென்னிந்தியாவில் இருக்கக் கூடிய நான்கு ராஜ்யங்களைத் தவிர மற்ற ராஜ்யங்களில் புளியும் மிளகாயும் உபயோகிப்பதில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? ஆகவே மற்ற ராஜ்யங்களுக்குப் போவதை தடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு ஏதாவது ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மற்ற ராஜ்யங்களில் உள்ளவர்களும் இப்போது உபயோகித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். வெளிநாட்டிலும்கூட இப்போது உபயோகிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். நாம் ஏற்றுமதியை குறைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம் என்று நான் முன்பே சொன்னேன். புளியைப் பொறுத்த வரையில் இந்த ராஜ்யத்திலிருந்து ஏற்றுமதி செய்வதே கிடையாது என்று சொன்னேன்.

SRI S. LAZAR : So far as tamarind is concerned, the Hon. Minister has stated that we are consuming it. But so far as chilly is concerned, he said that it is in surplus. In order to encourage growers of chillies, will the Government insist upon allowing for export of chillies at least from this year onwards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As I have already pointed out, the export of chillies is regulated by the price factor.

Publication of text-books.

* 511 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to start a printing press for publishing text-books; and

22nd March 1960]

(*b*) if so, the estimate and the manner in which it is proposed to be managed?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The matter is under the consideration of the Government.

SRI M. KALYANASUNDARAM : அச்சகம் ஆரம்பிப்பது ஆலோசனையில் இருக்கிறதா ? அல்லது புத்தகம் வெளியிடுவது ஆலோசனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அச்சகம் அமைக்க வேண்டும் என்ற ஆலோசனையைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். மேலும் ஐந்தாவது வகுப்புக்குரிய ஆங்கில பாட புத்தகம் சர்க்கார் அச்சகத்திலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதைப்பற்றி வேறு எந்த வித்தியாசமுமில்லை. அச்சகம் அமைக்கின்ற விஷயத்தில் இதை தனிப்பட்ட ஒரு கார்ப்பரேஷனாக அமைக்கலாமா, அல்லது இப்போது இருக்கின்ற முறையிலேயே, இப்போதுள்ள அச்சகத்தின் கீழ் ஒரு பகுதியாக அமைக்கலாமா என்பதைப்பற்றி ஆலோசனை இருந்து கொண்டிருக்கிறது.

MR. SPEAKER : If the hon. Member could wait for the next question, it will be answered.

* 512—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சர்க்காரால் பள்ளிகளுக்கு 5-வது வகுப்பு வரையிலும் பாட புத்தகம் போடும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

(ஆ) சர்க்காரே நேரடியாக பள்ளிகளுக்கு புத்தகம் அனுப்புமா ? அல்லது ஏஜண்டுகள் மூலம் வினியோகிப்பார்களா ?

(இ) தற்போது புத்தக வியாபாரம் செய்பவர்கள் சர்க்காரின் பாட புத்தக ஏஜண்டுகளாக நியமிக்கப்படுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The English Text Book for new Standard V to be published by Government for use in 1960–61 is being printed in the Government Press. It has been decided to publish the Tamil Text Book for two Standards for use in 1961–62 and for all five Standards for use in 1962–63. This depends upon the receipt of printing machinery now ordered.

(*b*) & (*c*) It is proposed to select leading publishers and book-sellers to stock and sell the text-books published by Government by calling for competitive quotations.

SRI M. KALYANASUNDARAM : ஸார், கார்ப்பொரேஷன் அமைக்கும் உத்தேசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த கார்ப்பொரேஷனில் தனியாருக்கும் கூட்டு இருக்குமா ? அல்லது அரசாங்கமே நியமிப்பதாக இருக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது தனி. சர்க்கார் நியமிக்கக் கூடிய கார்ப்பொரேஷன்.

SRI A. A. RASHEED : May I know whether a panel of writers have been appointed and if so, whether any remuneration had been paid to them?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. Various writers are called to write text-books and text-books are selected and remuneration also is paid.